ஆன்மிக சிகரத்தின்
# நம்ம ஊரு நியூஸ்
RNI No: TNTAM/2017/75122
Editor: V.S.N.Sharma | Chief Reporter : S.Esakki | Chennai : 9710755689 | 9962505384 | 4 பக்கம் | 6.3.2026 வெள்ளிக்கிழமை







## தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி மேற்கு வங்கத்திற்கு மாற்றம்:

# 9 மாநிலங்களுக்கு ஆளுநர்கள் மாற்றம்!

புதுடெல்லி, மார்ச் 6: தமிழ்நாடு ஆளுநராக (பொறுப்பு) ஆர்.வி. ஆர் லேகர் நியமிக்கப்பட்டுள்ளார். கேரள ஆளுநராக உள்ள இவருக்கு, தமிழக ஆளுநராக கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. தமிழக ஆளுநராக இருந்த ஆர்.என். ரவி, மேற்கு வங்க ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு, கேரளம், மேற்கு வங்க மாநிலங்களுக்கு விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஆளுநர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பாக குடியரசுத் தலைவர் மாளிகை வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி 9 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, தமிழ்நாடு ஆளுநராக இருந்த ஆர்.என். ரவி, மேற்கு வங்க ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். ஹிமாசலப் பிரதேச ஆளுநராக இருந்த ஷிவ் பிரதாப் சுக்லா தெலங்கானா ஆளுநராக நியமனம். தில்லி துணை நிலை ஆளுநராக தரன்ஜித் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். தெலங்கானா ஆளுநராக இருந்த ஜிஷ்னு தேவ் வர்மா மகாராஷ்டிர ஆளுநராக நியமனம். நாகாலாந்து ஆளுநராக நந்த் கிஷோர் யாதவ் நியமிக்கப்பட்டுள்ளார். பிகார் ஆளுநராக (ஓய்வு) லெப்டினென்ட் ஜெனரல் சையத் அதா நியமிக்கப்பட்டுள்ளார். லடாக் துணை நிலை ஆளுநராக இருந்த கவிந்தர் குப்தா ஹிமாசலப் பிரதேசத்தின் ஆளுநராக நியமனம். லடாக் துணை நிலை ஆளுநராக வினய்குமார் சக்சேனாவை நியமித்து குடியரசுத் தலைவர் உத்தரவிட்டுள்ளார். மேற்கண்ட நியமனங்கள் அந்தந்த, மாநில அலுவலகங்களில் பொறுப்பேற்கும் தேதிகளிலிருந்து அமலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## இறுதிப்போட்டியில் இந்தியா!

மும்பை, மார்ச் 6: ஐசிசி டி20 உலகக் கோப்பைத் தொடரில் மும்பை வான்கடே திடலில் நேற்று (மார்ச் 5) நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் விளையாடின. அதில், முதலில் பேட்டிங் செய்து இந்திய அணி நிர்ணயித்த 254 எனும் இமாலய இலக்கை இங்கிலாந்து அணியால் எட்ட முடியவில்லை.

இதையடுத்து, இந்திய அணி 7 ரன்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது. இங்கிலாந்து அணியில் அதிகபட்சமாக ஜேகோப் பெத்தேல் 48 பந்துகளில் 105 ரன்கள் குவித்து கடைசி ஓவரில் ஆட்டமிழந்தார்.

முன்னதாக, இந்திய அணியில் அதிகபட்சமாக சஞ்சு சாம்சன் 42 பந்துகளில் 89 ரன்கள் எடுத்தார். ஷிவம் துபே 25 பந்துகளில் 43 ரன்கள் எடுத்தார். டி20 உலக கோப்பை இறுதி ஆட்டத்தில் நியூஸிலாந்துடன் இந்தியா பலப்பரீட்சை நடத்துகிறது.










# பெரம்பலூர் அஸ்வின்ஸ் நிறுவனத்தில் தேசிய தொழிலாளர் பாதுகாப்பு தினம் அனுசரிப்பு






பெரம்பலூர், மார்ச் 6: தேசிய தொழிலாளர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு, பெரம்பலூர் கல்பாடி பிரிவு சாலையில் அமைந்துள்ள அஸ்வின்ஸ் குழுமத்தின் தலைமை அலுவலகத்தில் தேசிய தொழிலாளர் பாதுகாப்பு தின விழா சிறப்பாக அனுசரிக்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 4ஆம் தேதி முதல் மார்ச் 10ஆம் தேதி வரை தேசிய தொழிலாளர் பாதுகாப்பு வாரம் கடைபிடிக்கப் படுகிறது. அதன் ஒரு பகுதியாக நடைபெற்ற முதல் நாள் நிகழ்ச்சி *"Safety First - Work Next"* என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடை பெற்றது. அஸ்வின்ஸ் குழும தலைவர் டாக்டர் கே.ஆர்.வி. கணேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், தேசிய தொழிலாளர் பாதுகாப்பு கொடியை அவர் ஏற்றி வைத்து விழாவை தொடங்கி வைத்தார். தொடர்ந்து பணியிடங்களில் பாதுகாப்பு மற்றும் உடல்நலத்தை உறுதிப் படுத்தும் வகையில் தொழிலாளர் பாதுகாப்பு உறுதி மொழி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் அஸ்வின்ஸ் குழும துணைத்தலைவர் அஸ்வின், இயக்குநர்கள் செல்வகுமாரி கணேசன், நிஷாசிபி, ஹம்ருத்தா அஸ்வின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். குழும மேலாளர் அசோக் வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியில் பணியிடங்களில் பாதுகாப்பு விதிமுறைகளை கடைபிடிப்பதன் அவசியம், குறிப்பாக உணவு தயாரிப்பு மற்றும் தொழில் பணிகளில் கவனக்குறைவு இல்லாமல் செயல்பட வேண்டியதின் முக்கியத்துவம் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும் தேசிய தொழிலாளர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு, அடுத்தடுத்த நாட்களில் விழிப்புணர்வு பேரணி, ரத்ததான முகாம் உள்ளிட்ட பல்வேறு சமூகப் பணிகள் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் தொழிலாளர் பாதுகாப்பு அலுவலர் மற்றும் பொறுப்பாளர்கள் மகேஸ்வரன், மணிபாரதி ,தொழிற்சாலை மேலாளர் ராஜ்குமார்,தொழிற்சாலை பாதுகாப்பு மேலாளர் செல்வராசன், உற்பத்தித்துறை மேலாளர் ராஜன், அலுவலக மேலாளர் மகேஷ்வரன், அலுவலக துணை மேலாளர் மணிபாரதி மனித வளத்துறை அலுவலர் விஜயலெட்சுமி , உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். அலுவலக பணியாளர் ராஜன் நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சி நிறைவில் அஸ் வின்ஸ் நிறுவன ஊழியர் களுக்கு இனிப்புகள் வழங்கப் பட்டன.

## தமிழகத்தில் மார்ச் 11 வரை சில இடங்களில் மழை வாய்ப்பு

சென்னை, மார்ச் 6: தமிழகத்தில் நாளை முதல் 11-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தெற்கு உள் கர்நாடகம் முதல் தெலங்கானா வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் நாளையும், நாளை மறுதினமும் லேசான மழை பெய்யக்கூடும்.

இதர தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

8-ம் தேதி நீலகிரி, கோவை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களிலும், 9-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தமிழக கடலோர மாவட்டங்களிலும், 10, 11 தேதிகளில் நீலகிரி, கோவை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழக பகுதிகளில வறண்ட வானிலை நிலவக்கூடும்.

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் நாளையும், நாளை மறுதினமும் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 34 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலை 24 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக் கூடும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

## இடைக்காட்டூரில் அரங்கேறிய கொலைவெறித் தாக்குதல் நடவடிக்கை எடுக்க எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்

சென்னை, மார்ச் 6: இடைக்காட்டூர் கிராமத்தில் அரங்கேறிய கொலைவெறித் தாக்குதலில் தொடர்புள்ள அனைவரின் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சிவகங்கை மாவட்டம் இடைக்காட்டூர் கிராமத்திற்குள், இருசக்கர வாகனங்களில் அரிவாள் மட்டும் பட்டாக்கத்திகளுடன் வந்த ஒன்பது மர்மநபர்கள், கண்ணால் கண்டவர் மீது கொடூரத் தாக்குதல் நடத்தியுள்ளதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

இதே மாதிரியான தாக்குதல் 2 நாட்களுக்கு முன்பு தான் நாங்குநேரி அருகே உள்ள பெரும்பத்து கிராமத்தில் நடந்துள்ளது. அதன் ரத்த ஈரம் காய்வதற்குள் அதே போன்ற தொரு தாக்குதல் மீண்டும் நடக்கிறது என்றால், இவை சொல்லவரும் செய்தி என்ன?

சட்டம் - ஒழுங்கைக் காக்க வேண்டிய முதலமைச்சர், ஒரு கையாலாகாத வெறும் பொம்மை முதல்வராக இருக்கிறார் என்பது தானே? திமுக அரசின் "குற்றவாளிகள் கைது" நடவடிக்கையைக் கண்டு குற்றவாளிகள் யாரும் பயந்த மாதிரியே தெரியவில்லை. பட்டியலின மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் புகுந்து தைரியமாக இப்படி ஒரு கொலைவெறித் தாக்குதல் நடக்கிறது என்றால், இங்கே நடக்கும் சமூக அநீதி திமுக அரசு இதையெல்லாம் கைகட்டி வேடிக்கை பார்க்கிறது என்று தானே மக்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்?

இப்படி மக்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், சட்டம் - ஒழுங்கைக் காக்க வேண்டிய முதல்வர் என்ன செய்துக் கொண்டிருக்கிறார் தெரியுமா? "முடிந்து விட்டது" என தான் காட்டிய சைகை வைரல் ஆனதாக வெட்டிப் பெருமை பேசிக் கொண்டிருக்கிறார். உங்கள் ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு முடிந்துவிட்டது. பெண்கள் பாதுகாப்பு முடிந்துவிட்டது. சமூக நீதி முடிந்துவிட்டது. மொத்தத்தில், தமிழக மக்களின் நிம்மதியே முடிந்துவிட்டது.

இப்படி முடிந்துவிட்டதை எல்லாம் திரும்பப் பெற ஒரே வழி, உங்களுடைய விடியா ஆட்சிக்கு முடிவு கட்டுவதே. அதை மிக விரைவில் தமிழக மக்கள் சிறப்பாக செய்ய காத்திருக்கிறார்கள்.

இடைக்காட்டூர் கிராமத்தில் அரங்கேறிய கொலை வெறித் தாக்குதலில் தொடர்புள்ள அனைவர் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு: ஆட்சியர் நேரில் ஆய்வு!

தூத்துக்குடி, மார்ச் 6: தூத்துக்குடி மாவட்டத்தில் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு நடைபெறும் மையங்களில் ஆட்சியர் க. இளம்பகவத் நேரில் ஆய்வு செய்தார்.

தமிழ்நாட்டில் 2025-2026-ஆம் கல்வியாண்டிற்கான 12-ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, நேற்று (05.03.2026) தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க. இளம்பகவத், தேர்வு மையங்களுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

புதுக்கோட்டையில் உள்ள T.D.T.A. P.S. பெரியநாயகம் மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்திற்குச் சென்ற மாவட்ட ஆட்சியர், அங்கு மாணாக்கர்கள் அமைதியான முறையில் தேர்வு எழுதுவதை நேரில் பார்வையிட்டார். தொடர்ந்து அவர், வல்லநாடு வி.றி.வி.டி அரசு மேல்நிலைப்பள்ளி மையத்தில் மாணாக்கர்கள் தேர்வு எழுதுவதை பார்வையிட்டார். ஆய்வின் போது, தேர்வு அறைகளில் போதிய வெளிச்சம், காற்றோட்டம் மற்றும் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்தார். தேர்வுகள் முறைகேடுகளின்றி நடப்பதை உறுதி செய்ய நியமிக்கப்பட்டுள்ள பறக்கும் படைகளின் செயல்பாடுகள் மற்றும் கண்காணிப்புப் பணிகள் குறித்து கேட்டறிந்தார். மாணாக்கர்களுக்குத் தேவையான மருத்துவ முதலுதவி மற்றும் இதர சுகாதார ஏற்பாடுகள் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்தார். இந்த ஆய்வின் போது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் பள்ளி கல்வித்துறை உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.


அதர்மத்தை அகற்றிட! ஒன்றுபடுவோம்!! வென்றுவருவோம்!!!

ஸ்ரீ பைரவ சேனைகள் அறக்கட்டளை

கோவிலம்பாக்கம், சென்னை - 600 129.

கௌரவத் தலைவர்கள்

T.நடராஜன் K.முருகேசன் A.V.செந்தில் ராஜன் M.நாராயணன் A.சக்திவேல்

தலைவர் P.ராமகிருஷ்ணன் 9444317157

செயலாளர் T.ரவிசந்திரன் 9940536827

பொருளாளர் S.அருண்குமார் 9994641239

துணை தலைவர் நாஞ்சில் C.மனோகரன்

துணை செயலாளர் T.சுயம்புலிங்கம்

துணை செயலாளர் R.V.கணேசன்

ஆலோசகர்கள் குலசை A.சிதம்பரம் காமதேனு G.சுந்தர் சிங்

மக்கள் தொடர்பு தசரா நாயகி M.ஆனந்த், இசக்கி சுடலை

இளைஞர் அணி ஒருங்கிணைப்பாளர்கள் T.ஏழுமலை

## இரட்டை கொலை பின்னணியில் அரசியலா?

# நாங்குநேரியில் திருமாவளவன் எழுப்பிய சந்தேகம்



திருநெல்வேலிமார்ச் 6: "தமிழகத்தில் தேர்தல் நெருங்கியுள்ள நேரத்தில் நாங்குநேரியில் நடைபெற்ற இரட்டைக் கொலை சம்பவத் தில் ஏதேனும் அரசியல் கார ணங்கள் பின்புலமாக இருக் கிறதா என்பதை கண்டறிய வேண்டும்" என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி அருகே பெரும்பத்து பகுதியில் இரட்டைக் கொலை சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பத்தினரை திருமா வளவன் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். அப்போது ரூ.2.5 லட்சம் நிதியுதவியை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "நாங்கு நேரியில் நடைபெற்ற சம்பவம் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதன் பின்னணி விளங்கவில்லை. எந்த முன் விரோதமும் இல்லாத நிலையில் இரு அப்பாவிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

தென்மாவட்டங்களில் போதை பொருட்கள் பழக்கம் அதிகரித்துள்ளதாக கூறப்படும் நிலையில், போதை பழக்கத்துக்கு ஆளானவர்களால் கொலை நடைபெற்றதா, அல் லது ஏதேனும் அரசியல் காரணங்கள் இருக்கின்றனவா, தேர்தல் நெருங்கும் நேரத்தில் திமுக அரசுக்கு களங்கம் ஏற் படுத்தும் நோக்கம் இருக்கிறதா என்பது குறித்து விவாதிக்கப் பட்டு வருகிறது. இதை விசாரித்து கண்டறிய வேண்டும். இந்தப் பகுதியில் சில வாரங்களுக்குமுன் நாட்டு வெடி குண்டு வீசி வன்முறை நடை பெற்றதாக கூறப்படுகிறது. அதி லும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. கொலை செய்யப்பட்ட மாற்றுத் திறனாளி ஜானின் மனைவி வாய்பேச முடியாத வர். அவருக்கு சிறுவயதில் இரு பெண் குழந்தைகள் உள்ளனர். எனவே, ஜான் குடும்பத்தின ருக்கு போதிய நிதியுதவியை வழங்க வேண்டும். அரசு வேலைவாய்ப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது குறித்து மாவட்ட ஆட்சியரிடம் பேசினோம். கலைஞர் கனவு இல்லம் கட்ட உதவுவோம் என்றும், அரசு வேலை வழங்குவது குறித்து பரிசீலிப்பதாகவும் ஆட்சியர் தெரி வித்துள்ளார். அதுபோல் கொலை செய்யப்பட்ட ஒடிசா மாநிலத்தை சேர்ந்தவரின் குடும்பத்துக்கு நிதியு தவியும், கலைஞர் கனவு இல்லம் கட்ட உதவுவதற்கு பரிசீலிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலை சம்பவத்தில் அரசியல் பின்புறம் இருக்கிறதா என்பதை கண்டறிய வேண்டும். போதை பொருட்களில் இருந்து மக்களை பாதுகாக்க காவல் துறையும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பவத்தில் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் அவர்களையும் கைது செய்ய வேண்டும்" என்று திருமாவளவன் தெரிவித்தார்.

# பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் வேட்பாளராக அறிவிப்பு

## தூத்துக்குடியில் உற்சாகக் கொண்டாட்டம்!



தூத்துக்குடி, மார்ச் 6: தமிழகத்தில்காலியாகவுள்ள மாநிலங்களவை இடங் களுக்கான தேர்தலில், திமுக சார்பில் மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதற்குத் தூத்துக்குடியில் பரதவர் நலக் கூட்டமைப்பு சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப் பட்டது.

தமிழகத்தில் காலியாகவுள்ள 6 மாநிலங்களவை இடங்களில், திமுக கூட் டணிக்கு ஒதுக்கப்பட்ட 4 இடங்களில், ஒரு இடம் காங்கிரஸ் கட்சிக்கும், மற்றொரு இடம் தேமுதிக விற்கும் வழங்கப்பட்டது. மீதமுள்ள 2 இடங்களில் திமுக சார்பில் மூத்த உறுப்பினர் திருச்சி சிவா மற்றும் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் ஆகியோர் போட்டியிடுவார்கள் என திமுக தலைவரும், தமிழக முதல் வருமான மு.க. ஸ்டாலின் அதிகாரப் பூர்வமாக அறிவித்தார்.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்குப் பிரதிநிதித்துவம் வழங்கியதற்காகத் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தூத்துக்குடியில் சிறப்புக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. பரதவர் நலக் கூட்டமைப்பின் தலைவர் ஜேசையா வில்லவராயர் ஆலோசனைப்படி, ஒருங்கிணைப்பாளர் ஹெர்மன் கில்டு தலைமையில் பழைய மாநகராட்சி அலுவலகம் முன்பாகத் திரண்ட மீனவ மக்கள், பட்டாசுகள் வெடித்தும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் தங்களது மகிழ்ச்சியை வெளிப் படுத்தினர்.

பரதகுல மீனவ மக்களுக்கு உரிய அரசியல் அங்கீகாரம் வழங்கியதற்காகத் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் மற்றும் காங்கிரஸ் கட்சி மாநிலத் துணைத் தலைவர் ஏ.பி.சி.வி. சண்முகம் ஆகியோருக்குப் பரதவர் நலக் கூட்டமைப்பினர் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் குரூஸ் பர்னாந்து நற்பணி மன்றச் செயலாளர் சசிகுமார், பிரண்ட்ஸ் கருடோசா, திட்டோ மர்னாஸ், சேவியர் சில்வா, மானவே யோகேஷ், சேசுராஜா, பிரசாத் வாஸ், ரிகன், ஸ்டேரி மோரைஸ் உள்ளிட்ட ஏராளமான மீனவப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## திருச்செந்தூர் அவதார பதியில்

# அய்யா வைகுண்டரின் 194-வது அவதார தின விழா கோலாகலம்

திருச்செந்தூர், மார்ச் 6: திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில் கடற்கரை பகுதியில் அமைந்துள்ள அய்யா வைகுண்டர் அவதார பதியில், அய்யாவின் 194-வது அவதார தின விழா பல்வேறு சிறப்பு வழிபாடுகளுடன் மிகவும் விமரிசையாக நடைபெற்றது.

விழாவின் முதல் நாளான செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் சிறப்புப் பணிவிடைகள் தொடங்கின. உகப்படிப்பு மற்றும் காலை நேர அன்னதர்மம் நடைபெற்றது. நண்பகலில் உச்சி படிப்பு பணிவிடைக்குப் பிறகு, மாலையில் அய்யா புஷ்ப வாகனத்தில் பவனியாக வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

தொடர்ந்து திருஏடு வாசிப்பு, சிறுவர்-சிறுமியரின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் பேச்சுப் போட்டிகள் நடைபெற்றன. இரவு சிவச்சந்திரன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

முக்கிய நிகழ்வான நேற்று புதன்கிழமை அதிகாலை முதலே வழிபாடுகள் களை கட்டின. அதிகாலை தாலாட்டு பாடுதல் மற்றும் பள்ளி உணர்த்தல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சூரிய உதயத்தின் போது, பக்தர்கள் திரளாகச் சூழ்ந்து நிற்க, கடல் பதமிட்டு சூரிய பிரகாச சுத்த அய்யா வைகுண்டரை அவதார பதிக்கு அழைத்து வரும் வைபவம் நடைபெற்றது. பின்னர் அய்யாவுக்குச் சிறப்புப் பணிவிடைகள் செய்யப்பட்டு, பக்தர்களுக்கு இனிமம் மற்றும் அன்னதர்மம் வழங்கப்பட்டது.

விழாவில் நெல்லை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கான அய்யாவழி பக்தர்கள் வருகை தந்து வழிபாடு நடத்தினர். விழாவிற்கான விரிவான ஏற்பாடுகளை அய்யாவழி அகில திருக் குடும்ப மக்கள் சபை தலைவர் வள்ளியூர் எஸ். தர்மர், செயலாளர் பொன்னுதுரை, பொருளாளர் கோபால் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.

# சம்பன்குளம் தூர்வாரும் பணி: ஆட்சியர் நேரில் ஆய்வு

தூத்துக்குடி, மார்ச் 6: தூத்துக்குடி மாவட்டம் கருங்குளம் பகுதியில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோவில் மற்றும் மார்த்தாண்டேஸ்வரர் ஆலயம் ஆகியவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முக்கிய நீர் ஆதாரமாக சம்பன்குளம் திகழ்கிறது. நீண்டகாலமாகப் பராமரிப்பின்றி அமலைச் செடிகள் அடர்ந்து தூர்ந்து போயிருந்ததால், லேசான மழையின் போது கூட தண்ணீர் வெளியேறி கருங்குளம் - மூலைக்கரைப்பட்டி சாலையில் வெள்ளம் சூழ்ந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டு வந்தது. பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, இதனைச் சீரமைக்க மாவட்ட ஆட்சியர் உடனடியாக நடவடிக்கை எடுத்தார்.

மாவட்ட நிர்வாகத்தின் நிதி உதவி மற்றும் எக்ஸ்னோரா நிறுவனத்தின் வாடகை இல்லா இயந்திரங்கள் மூலம் தூர்வாரும் பணிகள் தற்போது முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. ராட்சத இயந்திரங்கள் கொண்டு அமலைச் செடிகள் அகற்றப்பட்டு, குளத்தின் கரைகளைப் பலப்படுத்தும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வின் போது மாவட்ட ஆட்சியரிடம் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன: குளத்தின் கரைகளில் கற்கள் பதித்து, பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் நடைப்பயிற்சி தடம் (Walking Track) அமைக்க வேண்டும் என மாதிரி தாமிரபரணி ஒருங்கிணைப்பாளர் முத்தாலங்குறிச்சி காமராசு கோரிக்கை விடுத்தார். இதனைப் பரிசீலித்த ஆட்சியர், உரிய நடவடிக்கை எடுக்க ஒன்றிய ஆணையாளருக்கு உத்தரவிட்டார்.

தாதன்குளம் பகுதியில் குடிநீர் விநியோகத்தைச் சீரமைக்கக் கோரி அப்பகுதியைச் சேர்ந்த சுந்தர் விடுத்த கோரிக்கைக்கு, விரைவில் தீர்வு காணப்படும் என ஆட்சியர் உறுதியளித்தார். ஆய்வின் போது ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியர் தாஹர் அகமது, நீர்வளத்துறை அதிகாரிகள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உடனிருந்தனர். ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து, கருங்குளம் மற்றும் கொங்கராயகுறிச்சி பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களையும் மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார்.






# இன்றைய பலன்கள்

## மேஷம் ராசி பலன்

மேஷம் ராசி சேர்ந்தவர்களுக்கு இன்று, சந்திரன் ராசிக்கு சப்தம ஸ்தானத்தில் அமர்வது உங்களுக்கு உறவில் வலுவான நிலையை ஏற்படும். இன்று நீங்கள் சில நல்ல ஒப்பந்தங்களை பெற வாய்ப்பு உண்டு. அரசாங்கத்திடம் மதிப்பு மரியாதை பெறலாம். பொருளாதார ரீதியாக முன்னேற்றத்திற்கான நல்ல வாய்ப்புகள் ஏற்படும். ராசி அதிபதியின் சஞ்சாரம் உங்களுக்கு சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உள்ளது, சுபநிகழ்வுகளை நடத்தும் வாய்ப்பு ஏற்படுத்தும். இன்று சமூகத்தில் உங்கள் நற்பெயர் அதிகரிக்கும்.

## ரிஷபம் ராசி பலன்

ரிஷபம் ராசி சேர்ந்தவர்களுக்கு இன்று, உங்களுடைய கவனம் புதிய திட்டங்களில் அதிகம் இருக்கும். ஆன்மீகம் மற்றும் சுப காரியங்களில் ஈடுபடுபீர்கள். இது உங்களுடைய மன அமைதியை அதிகரிக்கும். எந்தவித சட்ட தகராறுகள் விஷயத்தில் நிதானம் தேவை. சிலருக்கு வீடு இருந்து வேலை தொடர்பான இடமாற்றம் வெற்றிகரமாக அமையலாம். நாளின் பிற்பகுதியில் சில சிக்கல் இருந்த போதிலும் உங்கள் மனதில் தைரியம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி மற்றும் சுபமான சில மாற்றங்கள் ஏற்படும். இன்று உங்கள் ஆசைகள் நிறைவேறும். வேலையில் சூழ்நிலை சாதகமானதாக மாறும். இன்று உங்கள் சக ஊழியர்கள் உங்களை ஆதரிக்க வாய்ப்பு உண்டு.

## மிதுனம் ராசி பலன்

மிதுன ராசி சேர்ந்தவர்களுக்கு இன்று மிகவும் ஆக்கப்பூர்வமான நாள். கலைத்துறை அல்லது புதிய படைப்பு தொடர்பான முயற்சிகளில் நல்ல பலன் கிடைக்கும். இன்று நீங்கள் விரும்பும் சில முக்கிய வேலைகளை செய்து முடிக்க முடியும். உங்கள் மனதில் நிம்மதி அதிகரிக்கும். புதிய திட்டங்கள் மனதில் தோன்றும். மேலதிகாரிகளின் பாராட்டு, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். இதுநாள் வேளையில் முன்னேற்றம் எதிர்பார்க்கலாம். இந்த வியாபாரிகள் தங்களின் திட்டங்களால் நல்ல வெற்றியை பெறுவார்கள். இன்று உங்கள் நண்பர்களுடன் நேரம் செலவிட வாய்ப்பு கிடைக்கும்.

## கடகம் ராசி பலன்

கடக ராசி சேர்ந்தவர்களுக்கு இன்று மிகவும் ஆக்கப்பூர்வமான நாள். இன்று நீண்ட நாட்களாக தடைபட்டு வந்த உங்கள் முக்கிய வேலைகள் நிறைவடைய வாய்ப்பு உண்டு. சில முக்கிய விஷயங்கள் குறித்து குடும்பத்தினருடன் விவாதிப்பீர்கள். இன்று அலுவலகத்தில் உங்களுடைய யோசனைகள் மதிக்கப்படும். இதனால் வேலை தொடர்பான சூழ்நிலை சாதகமாக மாறும். மேலும் சங்க ஊழியர்களின் ஆதரவை பெறுவீர்கள். இன்று நீங்கள் திருமணம் போன்ற நல்ல நிகழ்வுகள் எல்லாம் கலந்து கொள்ள வாய்ப்பு உண்டு. உங்களுடைய குடும்ப பொறுப்புகளை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்.

## சிம்மம் ராசி பலன்

சிம்ம ராசி சேர்ந்தவர்களுக்கு இன்று உங்களுக்கு பரபரப்பான நாளாகவும் பணி சுமை நிறைந்த நாளாகவும் அமையலாம். இருப்பினும் உங்களுடைய மனம் ஆன்மீகம், தியானம் போன்ற விஷயங்களில் ஈடுபடுத்தினால் எதையும் சுமுகமாக கையாள முடியும். வேலையில் மூத்த அதிகாரிகளின் செயல்பாடு உங்கள் வேலையை கடினமாகலாம். இன்று நீங்கள் சில சுப காரியங்களில் பங்கேற்க வாய்ப்பு உண்டு. உங்கள் வேலை மற்றும் குடும்ப பொறுப்புகள் அதிகரிக்க வாய்ப்பு உண்டு. இன்று உங்களுக்கு தொழில் வாய்ப்புகள் குறைவாக இருக்கும்.

## கன்னி ராசி பலன்

கன்னி ராசி சேர்ந்தவர்களுக்கு இன்று உங்கள் செயல்பாடு மற்றும் பேச்சில் நிதானத்தையும் எச்சரிக்கையையும் கடைப்பிடிக்கவும். மேலும் பிறரிடம் எந்தவிதமான மோதல் போக்கையும் காட்ட வேண்டாம். இன்று குடும்பத்தினருடன் சில சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்க வாய்ப்பு உண்டு. இன்று உங்கள் விதியை நம்பி நம்பிக்கையுடன் செயல்படுவோம். மாலை நேரம் உங்களுக்கு சில நல்ல செய்திகள் தேடி வரும். இன்று நீங்கள் உங்கள் வேலை மற்றும் குடும்ப பொறுப்புகளை சிறப்பாக நிர்வகிப்பீர்கள். பணியிடத்தில் பாராட்டு கிடைக்கும்.

## துலாம் ராசி பலன்

துலாம் ராசி சேர்ந்தவர்களுக்கு இன்று உங்களுக்கு அதிக அளவில் நன்மை கிடைக்கக்கூடிய நாள். புதிய திட்டங்களை மனதில் கொண்டு வேலை செய்வது நல்ல. செய்வது நல்லது குடும்பத்தினருடன் கருத்து வேறுபாடுகள் நீங்கும். குறிப்பாக சிலருக்கு சொத்து தொடர்பான சிக்கல்களில் கவனம் தேவை. செலவுகளை கட்டுப்படுத்துவதும் அத்தியாவசியமான பொருட்களை மட்டும் வாங்குவது நல்லது. குடும்ப சூழல் மற்றும் நிதி நிலைமை உங்கள் மனதில் அமைதியற்ற நிலைக்கு கொண்டு செல்ல வாய்ப்பு உண்டு.

## விருச்சிகம் ராசி பலன்

விருச்சிக ராசி சேர்ந்தவர்களுக்கு இன்று உங்களுடைய நிதி நிலையை மனதில் கொண்டு நிதானமாக செயல்படுவது உங்களை முன்னேற்றத்திற்கு உதவும். இன்று எதிலும் விடாமுயற்சியுடன் செயல்படுவது நல்லது. உங்கள் குடும்பத்தின் அமைதி மற்றும் திருத்தன்மை அதிகரிக்கும். குழுவாக செய்யக்கூடிய வேலை அல்லது சொந்த தொழிலில் புகுத்தக்கூடிய புதுமை எதிர்காலத்தில் நன்மையை தரும். இன்று உங்கள் வேலை தொடர்பான விஷயங்களில் புத்துணர்வு பெறுவீர்கள். இன்று நீங்கள் திடீர் பயணம் செல்ல வாய்ப்பு உண்டு. அலுவலக பணி மற்றும் பிரச்சினைகளை நிதானமாக கையாள்வது நல்லது.

## தனுசு ராசி பலன்

தனுசு ராசி சேர்ந்தவர்களுக்கு இன்று எச்சரிக்கையுடனும் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டிய நாள். சொந்தத் தொழில், வியாபாரம் தொடர்பாக நீங்கள் எடுக்கும் சிறிய ரிஸ்க் குறிப்பிடத்தக்க லாபத்தை தரும். உங்களை அன்றாட வேலை மற்றும் வழக்கத்தை மேம்படுத்த வேண்டிய நாள். அன்புக்குரியவர்களுடன் நேரம் செலவிடுவது மற்றும் சிலருக்காக பணம் செலவிட வாய்ப்பு உண்டு. சில புதிய வாய்ப்புகள் நெருங்கி வரும். அதை சரியான விதத்தில் பயன்படுத்திக் கொள்வது நல்லது. அலுவலக பணி தொடர்பாக பிரச்சனைகளை சந்திக்க நேரிடும் . இன்று நீங்கள் கடினமாக உழைக்க வேண்டிய நாள்.

## மகரம் ராசி பலன்

மகர ராசி சேர்ந்தவர்களுக்கு இன்று ஒரு சாதாரண நாள். இன்று நீங்கள் சிலர் நலம் சேர்ந்து செய்யக்கூடிய வணிகத்தில் குறிப்பிடத்தக்க லாபத்தை பெற முடியும். இன்று உங்கள் பிள்ளைகளின் செயல்பாடு அல்லது அவர்கள் தொடர்பாக சில முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டியது இருக்கும். அதனால் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. ஒரே நேரத்தில் பல பணிகளை செய்வது தவிர்ப்பதும், பணிகளை திட்டமிடுவதும் நல்லது. இன்று வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் உங்களை கோபப்படுத்த வாய்ப்பு உண்டு. சூழ்நிலை கவனமாக கையாள வேண்டிய நாள். காதல் விஷயத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

## கும்பம் ராசி பலன்

கும்ப ராசி சேர்ந்தவர்களுக்கு இன்று உங்கள் உடல்நலத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நாள். பருவநிலை மாற்றம் காரணமாக சில உடல் சார்ந்த பிரச்சினைகளை சிந்தனைக்கு நேரிடும். இது உங்கள் உணவு பழக்க வழக்கத்தில் கவன குறைவாக இருக்க வேண்டாம். வணிகம் தொடர்பான விஷயங்களில் சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக அமையும். உங்கள் பேச்சு மற்றும் செயல், முடிவு எடுக்கும் விஷயத்தில் நிதானத்தை கடைபிடிக்கவும். வேலையில் இன்று சில சவால்களை சந்திக்க நேரிடும். அலுவலகத்தில் உங்களுடைய செயல்பாடு பாராட்டை பெற்று தரும்.

## மீனம் ராசி பலன்

மீன ராசி சேர்ந்தவர்களுக்கு இன்று லாபகரமான நாளாக இருக்கும். இன்று உங்கள் வேலை தொழில் தொடர்பாக ஆபத்தான முடிவுகளை எடுக்க வேண்டாம். இன்று பொறுமை மற்றும் மென்மையான நடத்தை உங்களை கடின சூழலில் இருந்து வெளிவர உதவும். உங்கள் வேலைகளை புத்திசாலித்தனமாக முடிக்க வேண்டிய நாள். இன்று தேவைப்படும் நபர்களுக்கு முடிந்த அளவு உதவவும். இன்று வணிகம் தொடர்பாக சில ஒப்பந்தங்கள் கிடைக்க வாய்ப்பு உண்டு. சில கடினமான பணிகள் காரணமாக நாள் முழுவதும் அலுவலகத்தில் மும்முரமாக செயல்படுவீர்கள்.


# மாநிலங்களவை தேர்தலுக்காக தமிழகத்தில் 6 பேர் வேட்புமனு தாக்கல்


திருச்சி சிவா


தம்பிதுரை


கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்


கிறிஸ்டோபர் திலக்


எல்.கே.சுதீஷ்


அன்புமணி

சென்னை,மார்ச் 6: தமிழகத்தில் திமுக, அதிமுக கூட்டணி கட்சிகள் சார்பில் மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் 6 பேரும் முதல்வர் ஸ்டாலின், அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி முன்னிலையில் வேட்புமனு தாக்கல் செய்தனர். சுயேச்சைகள் உள்ளிட்ட மற்ற வேட்பாளர்களின் மனுக்கள் போதிய முன்மொழிவு இல்லாமல் நிராகரிக்கப்படும் என்பதால், இவர்கள் 6 பேரும் போட்டியின்றி தேர்வாகின்றனர்.

தமிழகத்தில் திமுகவின் திருச்சி சிவா, கனிமொழி சோமு, என்.ஆர்.இளங்கோ, அந்தியூர் செல்வராஜ், அதிமுகவின் தம்பிதுரை, தமாகாவின் ஜி.கே.வாசன் ஆகிய 6 மாநிலங்களவை எம்.பி.க்களின் பதவிக் காலம் ஏப்ரலில்முடிவடைகிறது. இதேபோல, நாடு முழுவதும் மொத்தம் 10 மாநிலங்களில் 37 மாநிலங்களவை எம்.பி.க்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் மார்ச் 16-ம் தேதி நடைபெறும் என்று இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணைய அறிவிக்கையின்படி, சென்னை தலைமைச் செயலகத்தில் கடந்த பிப்.26-ம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங்கியது. மனு தாக்கலுக்கான அவகாசம் மார்ச் 5-ம் தேதியுடன் நிறைவடையும் என்று அறிவிக்கப்பட்டது. மார்ச் 4-ம் தேதி வரை 3 சுயேச்சை வேட்பாளர்கள் மனுத் தாக்கல் செய்தனர். நேற்று ஒரு சுயேச்சை வேட்பாளர் மனு தாக்கல் செய்தார்.

இதற்கிடையே, தமிழகத்தில் உள்ள எம்எல்ஏக்கள் எண்ணிக்கை அடிப்படையில் திமுக சார்பில் 4 பேரையும், அதிமுக சார்பில் 2 பேரையும் வேட்பாளர்களாக நிறுத்த முடியும். அந்த வகையில், திமுக வேட்பாளர்களாக கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா, செய்தித் தொடர்பு பிரிவு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் ஆகிய இருவரும் கடந்த 4-ம் தேதி அறிவிக்கப்பட்டனர்.

திமுகவுக்கான மற்ற 2 இடங்கள் கூட்டணிக் கட்சிகளான தேமுதிகவுக்கும், காங்கிரஸுக்கும் ஒதுக்கப்பட்டது. காங்கிரஸ் வேட்பாளராக அக்கட்சியின் தேசிய பொதுச் செயலாளரும், வடகிழக்கு மாநிலங்களின் பொறுப்பாளருமான கிறிஸ்டோபர் திலக்கும், தேமுதிக சார்பில் அக்கட்சியின் பொருளாளர் எல்.கே.சுதீஷும் போட்டியிடுவதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

அதேபோல, அதிமுக வேட்பாளராக தம்பிதுரையும், கூட்டணிக் கட்சியான பாமகவுக்கு ஒதுக்கப்பட்ட ஒரு இடத்தில் அக்கட்சியின் தலைவர் அன்புமணியும் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், திமுக, அதிமுகவின் அதிகாரப்பூர்வ வேட்பாளர்கள் 6 பேரும் சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

முதல்வர் ஸ்டாலின், அகில இந்திய காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் முன்னிலையில் திருச்சி சிவா, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கிறிஸ்டோபர் திலக், சுதீஷ் ஆகிய 4 பேரும் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

முன்னதாக, அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, முன்னாள் அமைச்சர்கள் கே.பி.முனுசாமி, எஸ்.பி.வேலுமணி, தங்கமணி, பாமக எம்எல்ஏ வெங்கடேஷ்வரன் உள்ளிட்டோர் முன்னிலையில் தம்பிதுரை, அன்புமணி ஆகிய இருவரும் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

ராமதாஸ் பரிந்துரையில்.. மனுதாக்கல் நிறைவடையும் நேரத்தில், பாமக நிறுவனர் ராமதாஸ் பரிந்துரையில், அக்கட்சியின் அதிகாரப்பூர்வ வேட்பாளர் என ப.சுவாமிநாதன் வேட்புமனு தாக்கல் செய்தார். தேர்தல் நடத்தும் அதிகாரி இரா.சாந்தி, உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி பி.தேன்மொழி ஆகியோர் மனுக்களை பெற்றுக் கொண்டனர்.

வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெறுகிறது. மனுக்களை திரும்ப பெறுவதற்கான அவகாசம் மார்ச் 9-ம் தேதி ஆகும். மார்ச் 16-ம் தேதி காலை 9 முதல் மாலை 4 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை கட்சிகள் சார்பில் 7 பேர், சுயேச்சைகள் 4 பேர் என மொத்தம் 11 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். ராமதாஸ் பரிந்துரைத்த சுவாமிநாதன் மற்றும் 4 சுயேச்சை வேட்பாளர்களின் மனுக்களை 10 எம்எல்ஏக்கள் முன்மொழிய வாய்ப்பு இல்லை என்பதால் இவர்களது மனுக்கள் நிராகரிக்கப்படும்.

போட்டியின்றி தேர்வாகின்றனர்: அந்த வகையில், 6 மாநிலங்களவை எம்.பி. பதவிகளுக்கு 6 பேரின் வேட்புமனுக்கள் மட்டுமே ஏற்கப்படும் சூழலில், 6 பேரும் போட்டியின்றி தேர்வு செய்யப்படுவார்கள்.

தேர்தல் நடைமுறை கள் மார்ச் 20-ம் தேதி நிறைவடை கின்றன. மனுதாக்கல் செய்த பிறகு, செய்தியாளர்களிடம் பேசிய தம்பிதுரை, ''நான் மாணவப் பருவத்தில் இருந்தே எம்ஜிஆர் விசுவாசி. 1972-ல் அதிமுக தொடங்கியது முதல் உறுப்பினராக இருந்து பணியாற்றியவன்.

மிக இளம் வயதிலேயே எனக்குபொறுப்பு வழங்கியவர் எம்ஜிஆர். எனக்கு மீண்டும் போட்டியிட வாய்ப்பளித்த பழனிசாமிக்கு நன்றி'' என்றார். காங்கிரஸ் வேட்பாளர் கிறிஸ்டோபர் திலக் பேசும்போது, "ராகுல் காந்தி கடந்த 2008-ல் இளைஞர் காங்கிரஸில் புது ரத்தம் பாய்ச்சினார். அப்போது இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகள் கொடுக்கப்பட்டன.

அப்படி வாய்ப்பை பெற்ற நான், பல்வேறு மாநிலங்களில் கட்சிக்காக பணியாற்றி இருக்கிறேன். ஒரு அடிமட்ட தொண்டனுக்கு இந்த வாய்ப்பை வழங்கிய ராகுல் காந்தி மற்றும் முதல்வர் ஸ்டாலி னுக்கு நன்றி'' என்றார்.




## மத்திய கிழக்கில் போர்ப்பதற்றம்:

# இந்திய முதலீட்டாளர்களுக்கு ரூ.10 லட்சம் கோடி இழப்பு

மும்பை, மார்ச் 6: மும்பை மற்றும் தேசியப் பங்குச் சந்தைகளில் நேற்று நடைபெற்ற வர்த்தகம் கடும் சரிவைச் சந்தித்தது. மத்திய கிழக்கு நாடுகளில் போர்ப் பதற்றம், சர்வதேச சந்தைகளில் நிலவி வரும் நிச்சயமற்ற சூழல் காரண மாக, மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண்ணான சென்செக்ஸ் நேற்றைய வர்த்தகத்தின் போது 1,700 புள்ளிகளுக்கு மேல் சரிந்தது.

இதன் காரணமாக நேற்று ஒரே நாளில் முதலீட்டாளர்களுக்கு சுமார் ரூ.10 லட்சம் கோடி அளவுக்கு இழப்பு ஏற் பட்டது.

ஈரான் - இஸ்ரேல் இடையே போர் தீவிரமடைந்து வருவதும், அதில் அமெரிக்காவின் தலையீடும் சர்வதேச முதலீட்டாளர்களைப் பெரும் கவலைக்கு உள்ளாக்கியுள்ளது. போர் சூழல் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதால், கச்சா எண்ணெய் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.

இது இந்தியாவின் பணவீக்கத்தை அதிகரிக்கும் என்ற அச்சம் எழுந்துள்ளது. மேலும், டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு இதுவரை இல்லாத அளவாக 92-க்கும் கீழ் சரிந்ததும் சந்தையில் பலவீனமான சூழலை உரு வாக்கியுள்ளது. சென்செக்ஸ் 1,122.66 புள்ளிகள் சரிந்து 79,116.19-ல் நிலைபெற்றது. நிப்டி 385.20 புள்ளிகள் குறைந்து 24,480.50 புள்ளிகளில் நிலை கொண்டது. ஏழு மாதங்களுக்குப் பிறகு வர்த்தகத்தின் போது நிப்டி 24,400 என்ற நிலைக்குக் கீழ் சென்றது இதுவே முதல்முறையாகும்.



## பிரபலங்கள் சங்கமித்த அர்ஜுன் டெண்டுல்கர்

# சானியா சந்தோக் திருமண நிகழ்வு!

மும்பை, மார்ச் 6: இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல் கரின் மகன் அர்ஜுன் டெண்டுல்கர் மற்றும் சானியா சந் தோக் திருமணம் மும்பையின் (மார்ச் 5) நடைபெற்றது. இதில் சச்சின் குடும்பத்தினருடன் விளையாட்டு, தொழில் துறை யினர், அரசியல் பிரமுகர்கள் மற்றும் திரைத் துறையை சேர்ந்த பிரபலங்கள் பலர் பங்கேற்றனர்.

மும்பையின் தெற்கு பகுதியில் பிரத்யேக நிகழ்வாக இந்த திருமண விழா நடைபெற்றது. இதில் சச்சின் குடும்பத்தினர், நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் பங்கேற்று சிறப்பித் தனர். கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் அர்ஜுன் டெண்டுல்கர் மற்றும் சானியா சந்தோக் ஜோடிக்கு திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது குறிப் பிடத்தக்கது.

இந்த திருமண விழாவில் இந்தியா கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் களான சுனில் கவாஸ்கர், ராகுல் திராவிட், அனில் கும்ப்ளே, ரவி சாஸ்திரி, யுவராஜ் சிங், கவுதம் கம்பீர், இர்பான் பதான், யூசுப் பதான், விரேந்தர் சேவாக், சுரேஷ் ரெய்னா, ஆகாஷ் சோப்ரா, ஜாஹிர் கான், ஹர் பஜன் சிங், பார்த்திவ் படேல், தாவால் குல்கர்னி, அஜித் அகர் கர், திலீப் வெங்சர்கர், ஸ்ரேயாஸ் கோபால், வெங்கடேஷ் பிரசாத், பிரக்யான் ஓஜா உள்ளிட்டோர் தங்கள் குடும்பத்தினருடன் பங்கேற்றனர்.

ஐசிசி தலைவர் ஜெய் ஷாவும் இதில் பங்கேற்றார். தொழிலதிபர் முகேஷ் அம் பானி - நீதா அம்பானி இணை யர், நட்சத்திர ஜோடியான அபி ஷேக் பச்சன் - ஐஸ்வர்யா ராய் பச்சன், மகாராஷ்டிரா மாநில முதல்வர் அஷிஷ் ஷெலர் உள்ளிட்டோரும் இதில் பங்கேற்றனர்.

அர்ஜுன் டெண்டுல்கர்: 26 வயதான அர்ஜுன் டெண்டுல்கர், உள்ளூர் கிரிக்கெட்டில் கோவா அணிக்காக விளையாடி வருகிறார். ஐபிஎல் கிரிக்கெட் டில் 2021 முதல் 2025 வரையில் மும்பை இந்தியன்ஸ் அணியில் விளையாடி இருந்தார். இடது கை பவுலர்.

சானியா சந்தோக், தொழிலதிபர் கய் குடும்பத்தை சேர்ந்தவர். லண்டனில் படித்து பட்டம் பெற்றவர். இவர்களின் திருமணத்துக்கு முன்னதாக மெஹந்தி நிகழ்வும் ஏற்பாடு செய்யப் பட்டது.




Owned, Printer and Published by **G.SASIREKA** from No: 64/80, Vivehananda Colony, Vadapalani, Chennai - 26, Printing at Annai Abirami Achagam, No: 24, Venguchetty Street, Poonga Nagar, Chennai - 3. Editor: **V.S.N.SHARMA.**